# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக்கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.SA 8740/விசாரணை/E/2023</u>**

திரு.K.பாண்டி -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை-20. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>இறுதி ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 07.10.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக 30.01.2026 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், இவ்வாணையத்தால் 30.01.2026 அன்று கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது :-

> *ஆகவே, இவ்வாணையத்தின் 07.10.2025 தேதியிட்ட உத்தரவின்படி, மேல்முறையீட்டாளருக்கு மீண்டும் ஆவணங்களை பார்வையிட சட்டப்பிரிவு 2(j)-ன்படி அனுமதி வழங்கி, அவர் ஆவணங்களை பார்வையிட வருகை தரும்பட்சத்தில், அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழ் வழங்கக்கூடிய தகவல் அடங்கிய ஆவணங்களை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)–ன் கீழ் 25 பக்கங்களுக்கு கட்டணமின்றி வழங்கியும், இதர பக்கங்களுக்கு உரிய கட்டணத்தை பெற்றுக் கொண்டு வழங்கியும், அவற்றை மேல்முறையீட்டாளர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக இவ்வாணையத்தில் 27.02.2026 அன்று தவறாமல் நேரில் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. மேற்குறித்த உத்தரவின் அடிப்படையில், மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக திரு.வெங்கடேசன் 27.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலரின் 26.02.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர் 26.02.2026 தேதியிட்ட அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மேல்முறையீட்டாளருக்கு 05.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக SA 8740/E/2023, SA

83/2023, NC 1574/2023, SA 8067/2023 ஆகியவற்றின் மீது ஆணையம் பிறப்பித்த உத்தரவின் பேரில், 12.02.2026-க்குள் ஏதேனும் ஒரு வேலை நாளில் தங்கள் அலுவலகத்தில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கியதன் அடிப்படையில், மேல்முறையீட்டாளர் 12.02.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆவணங்களை பார்வையிட்டு ஏற்பளிப்பு செய்த கடிதம் வழங்கியுள்ளதாக தெரிவித்து, அவற்றின் நகல்களை இணைத்து சமர்ப்பித்துள்ளார். மேலும் இன்று ஆணையத்தில் பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான அலுவலர், மேல்முறையீட்டாளர் இவ்வழக்கில் கோரியுள்ள தொட்டப்பநாயக்கனூர் கிராம புல எண்கள் தொடர்பாக தகவல் கோரி பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து வருவதாகவும், தங்கள் பொது அதிகார அமைப்பில் உள்ள ஆவணங்கள் வழங்கப்பட்டும், அவர் ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கி, அவர் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. மேல்முறையீட்டாளர் 12.02.2026 தேதியிட்ட கடிதத்தில், பார்வையில் ஆணையத்தின் SA 83/விசாரணை/E/2023 என்ற வழக்கு எண்ணை மட்டும் குறிப்பிட்டு, தான் 12.02.2026 அன்று அலுவலகத்தில் ஆஜராகி தொட்டப்பநாயக்கனூர் சிட்டா-28, நக்கலப்பட்டி சிட்டா-20, தொட்டப்பநாயக்கனூர் SLR-5. நக்கலப்பட்டி-SLR பார்வையிட்டதில் சிதைந்த நிலையில் உள்ளதால் நகல் ஏதும் பெறப்படவில்லை என்றும், தொட்டப்பநாயக்கனூர் மற்றும் நக்கலப்பட்டி அ பதிவேடு பார்வையிட்டு நகல் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

5. பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்த ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு மேற்குறித்த 4 வழக்குகள் தொடர்பான ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கியும், அதனடிப்படையில் மேல்முறையீட்டாளர் ஆவணங்களை பார்வையிட்டுள்ளதும், அதற்கு பின்பாக அவர் ஒரே ஒரு வழக்கு எண்ணை மட்டும் குறிப்பிட்டு கடிதம் அளித்துள்ளதும் தெரிய வருகிறது.

5. இவ்வாணையத்தின் உத்தரவினை பொதுத் தகவல் அலுவலர் நிறைவேற்றியுள்ளதன் அடிப்படையிலும், பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ள ஆவணங்களை பார்வையிட்டு, மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டுள்ளதன் அடிப்படையிலும், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 08.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 8740/விசாரணை/E/2023</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை-20.

திரு.K.பாண்டி
38 நேரு தெரு,களத்துப்பொட்டல்,
தத்தனேரி, மதுரை-18.

Copy to: File

RJ/PS 8.4